
# தெளிவு

## உலக ஆசிரியர் தின வெளியீடு

தேடல்:1 05.10.2012 தெளிவு:5




கலாசார மன்றம்
வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி
வவுனியா.

# தெளிவு

## உலக ஆசிரியர் தின வெளியீடு

தேடல்:1 05.10.2012 தெளிவு:5

**பணிப்பு**

திரு.க.பேர்ணாட்
பீடாதிபதி

**வழிகாட்டல், போசகர்:**

திரு.க.சுவர்ணராஜா
உபபீடாதிபதி (நிதி நிர்வாகம்)

**ஆலோசகர்:**

திரு.தி.ஜெயகாண்டீபன்
விரிவுரையாளர் இணைப்பாளர் (நிதி நிர்வாகம்)

**இணை ஆசிரியர்கள்:**

சி.வசந்தராஜ்
T.குமணன்

கலாசார மன்றம்
வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி
வவுனியா.

# கலாசார மன்றம்

| | | |
|---|---|---|
| தலைவர் | : N.உதயசீலன் | |
| உபதலைவர் | : அருட்சகோதரி.மேரி எழிலரசி | |
| செயலாளர் | : B.றஜிதா | |
| உப செயலாளர் | : R.தர்சன் | |
| பொருளாளர் | :S.M.ஜரீத் | |
| மதப் பிரதிநிதிகள் | : | |
| | இந்து சமயப் பிரதிநிதி: P.ஜீவகன் | |
| | கிறிஸ்தவ சமயப் பிரதிநிதி: S.செபமலர் | |
| | இஸ்லாம் சமயப் பிரதிநிதி:R.M.பைசல் | |
| பத்திராதிபர் | : சி.வசந்தராஜ் | |
| உப பத்திராதிபர் | : T.குமணன் | |

**வகுப்புப் பிரதிநிதிகள்:**

| | | |
|---|---|---|
| கணித விஞ்ஞானப் பிரிவு: | K.விஸ்ணுப்பிரகாஷ் | S.துளசிகா |
| வர்த்தகப் பிரிவு A | : J. அருண்ராஜ் | V.வினோதினி |
| B | : கிளமென்ட் காஸ்றோ பெர்ணான்டோ | V.திவ்யா |
| இந்து சமயப் பிரிவு | : T.டினராஜ் | N.சிவநிதா |
| கிறிஸ்தவ சமயப் பிரிவு: | A.குயின்ரஸ் | அருட்சகோதரி மேரி அலன் |
| ஆரம்பப் பிரிவு | : A.துசீபநாதன் | I.R.நதீரா |
| விவசாயப் பிரிவு | : T.கஜரூபன் | M.R.F.இரபானா |
| உடற்கல்விப் பிரிவு | : MM.பாத்தீஹ் | S.திருமகள் |

# பீடாதிபதி அவர்களின் ஆசிச் செய்தி

உலகலாவிய கல்விமுறைமையிலும், தேசிய கல்வி முறைமையிலும் மாணவர்களுக்கு அடுத்த படியாக பெரிதும் முக்கியத்துவம் பெறும் தொகுதியினர் ஆசிரியர்களேயாவர். உலகின் தன்னலமற்ற சேவைகளில் சிறப்பான சேவையாக கருதப்படுவது ஆசிரியர் சேவையாகும். ஆசிரியர்களின் செயலூக்கம், அர்ப்பணிப்பு என்பவற்றைக் கருத்திற் கொண்டு ஆசிரியர்களை பாராட்டவும், உலகளாவிய ரீதியில் அவர்களுக்கான சமூக அங்கீகாரத்தினை உறுதிப்படுத்துவதற்கான ஒரு தினமாக உலக ஆசிரியர் தினம் கொண்டாடப்படுகின்றது.

உலக ஆசிரியர் தினம் பற்றி நோக்குகையில் இத்தினத்தில் ஆசிரியர்கள் புத்தூக்கத்துடன் தரமான ஆசிரியத்துவத்தை உலகிற்கு அளிக்க திடசங்கற்பம் கொள்ள வேண்டிய ஒரு தினமாக அமைகின்றது எனலாம். எந்தவொரு தொழிலிலும் பாராட்டுக்குரிய இடத்தைப் பெற்றவர்கள் எப்போதும் எதையும் மிகச்சிறந்த முறையில் செய்யும் பழக்கமுடையவர்கள் ஆவார். சிறந்த முறையில் தொழிலாற்றுபவர்கள் எப்போதும் தரம் குறைந்தவற்றை வைத்துத் திருப்தி அடைவதில்லை. அவர்கள் தம்மை சிறு வட்டத்துக்குள் சுருக்கிக் கொள்வதில்லை மற்றவர்கள் செய்வது போல அவர்கள் செய்யமாட்டார்கள் அதைவிட மேலாக சிறப்பாகத்தான் செய்வார்கள். தன் கையில் வந்து சேர்ந்த எந்த வேலையையும் மேலும் உயரியதாக ,மேலும் மேம்பட்டதாகத்தான் செய்து முடித்து அனுப்புவார்கள். இன்னும் "சிறிய மேன்மையாக" என்ற விடயம் தான் அவர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துகின்றது. எதையும் செய்வதில் முதல்தரம் என்ற விடாமுயற்சியுடன் முனைபவர்கள் வாழ்வில் மிகச்சிறந்த இடத்தைப் பெற்று வெற்றியடைவார்கள். என்ற சிந்தனையை இன்றைய நாளில் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

உலக ஆசிரியர் தினத்தை வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் கொண்டாடும் கல்லூரியின் கலாசார மன்றத்தினருக்கும் அதன் போசகர், ஆலோசகர்களுக்கும் எனது பாராட்டுக்களை தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

மேலும் சிறு சஞ்சிகையானாலும் ஒவ்வொரு வருடமும் உலக ஆசிரியர் தினத்தில் வெளியிடப்படும் "தெளிவு" சஞ்சிகைக்கு எனது உளம் நிறைந்த வாழ்த்துக்களை தெரிவித்து நிற்கின்றேன்.

**க.பேர்ணாட்,**
பீடாதிபதி
வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி

# ஆசிரியர் தின ஆசிச் செய்தி

உலக ஆசிரியர் தினத்தை நாமும் கொண்டாடுகின்றோம். தினமும் கொண்டாட வேண்டிய ஆசிரியரை ஆசிரியர் தினத்திலாவது கொண்டாடுகின்றோம். அந்தளவில் மகிழ்வே.

உலக மாற்றங்களை உள்வாங்கி மனித சமூக வளர்ச்சிக்கான படிக்கல்லாக அமைவது கல்வியே. சமூக உயர்வுக்கு வித்திடும் ஆசிரியரை மனதில் இருத்திக் கொள்ளும் பண்பு இன்று குறைந்துள்ளது. இதற்கு ஆசிரியர்கள் காரணமா? சமூகம் காரணமா? என்று சர்ச்சிப்பதல்ல நோக்கம். ஆனாலும் கௌரவம் தானாக வருவதல்ல ஒருவர் தன்னுடைய நடத்தையாலும், ஆளுமையாலும், முன்மாதிரியாலும் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். எதிர்பார்த்துப் பெறமுடியாத ஒன்று கௌரவம். இன்றை கல்விமுறையும் அன்றுபோல் ஆசிரியர் மையமாக இல்லை என்று கூறப்பட்டாலும் என்றுமே ஆசிரியர் கற்றல்-கற்பித்தலில் உள்ளடக்கமாக விளங்குகின்றார்.

நன்னூலில் ஆசிரியரை "கற்பிக்கப்படுவோன்" என்று குறிப்பிடப்படுவது காணலாம். ஆசிரியரின் நடததைகளை பேச்சை, எழுத்தை மொழியாற்றலை, உடையை, கருத்துக்களை, அறிவை திறன்களை, மனப்பான்மைகளை, வாய்மையை, ஆளுமைப் பண்புகளையே மாணவன் பின்பற்றப்பழகுகிறான் என்பதால் ஆசிரியர் கல்விச் செயற்பாட்டின் தவிர்க்கமுடியாத மையப்புள்ளியாகவே என்றும் இருப்பார் என்பதே உண்மை.

பாடநூல்மையக் கல்வி, பிள்ளை யைக்கல்வி, தேர்ச்சி மையக்கல்வி என்றவாறு கற்பித்தலின் குறிகள் மாறினாலும் அவையாவும் ஆசிரியரையோ சுற்றிச் சுழன்று கொண்டிருக்கும். எமது பாரம்பரிய கல்விப் பின்னணி இவ்வாறான நடைமுறைக்கே வழிவகுக்கும்.

ஆசிரியர் மையமான செயற்பாடுகளைப் புறந்தள்ளி மாணவனின் ஆர்வத்தையும், கல்வி மீதான நம்பகத்தையும் வளர்த்தல் அரிது. எனவே ஆசிரியர்களை ஆசிரியர் தினத்தில் மட்டுமன்றி எந்நாளிலும் நினைவுகூர்வது சாலப்பொருந்தும் என்ற சிந்தனையோடு

ஆசிரியர்களை
ஆசிரிய பயிலுனர்களை
கல்வித்துறையினரை வாழ்த்துதல் எமது சமூக உயர்வுக்கு வழிகோலும் என்க.

நன்றி.

**கு. சிதம்பரநாதன்**
உப பீடாதிபதி (கல்வியும் தரமேம்பாடும்)
வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி

## வாழ்த்துச் செய்தி

உலக ஆசிரியர் தினத்தையொட்டி வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் கலாசார மன்றத்தினால் வெளியிடப்படும் தெளிவு சஞ்சிகைக்கு வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

தெளிவு என்பது பிறரால் தரவல்லது அல்ல.தெளிவு எமக்குள் எம்மால் சுயமாக உருவாக்கப்படுவதாகும்.ஆசிரிய சேவையின்,ஆசிரிய செயலாற்றுகையின்,ஆசிரிய வகிப்பாகத்தின் கருப்பொருளாக அமைவது தெளிவைப் பெறுதல்.தெளிவாக கருமமாற்றுதல்.தெளிவாக நடந்துக்கொள்ளல் என்பனவாகும்.

தெளிவு என்பது எமது மதிப்பீடுகளாலும், மீள்நோக்கல்களாலும் எமது உள் உலகத்தில் உருவாகுபவை ஆகும்.

பொதுவாக எம் உள் உலகமானது தன்னம்பிக்கை, தன்னை அறிதல்,வாழ்க்கை குறிக்கோள்கள், மனிதத்தன்மை, நம்பகத்தன்மை, குழப்பங்களை கையாளுதல், சறுக்கல்களை சமாளித்தல், விட்டுக்கொடுத்தல், அனுசரித்து நடத்தல், நேர்மை போன்ற பண்புகளின் சேர்க்கையில் உருவானதாகும். இவ்விடயங்கள் ஒவ்வொன்றிலும் நாம் தெளிவாக இருக்கும் போது நாம் ஆற்றும் பணி மகத்தான பணியாக மாறுவதோடு பணி தொடர்பான திருப்பதியும் எம்முள் உருவாகும்.

தெளிவான பார்வை,தெளிவான நடத்தை ,தெளிவான இலட்சியம், தெளிவான மதிப்பீடுகள் ஆசிரியத்துவத்தின் இருப்பை உறுதிப்படுத்தும்.

ஒரு நதி போல தெளிவான நகர்வு,துணிகரமான ஒருவழியில் செல்லுதல்,தடைகளையும் குறுக்கீடுகளையும் தாண்டுதல்,கடைசிவரை முயற்சித்தல்,அடைந்த பெறுபேற்றினை பின்னோக்கிப் பார்த்தல்,என்பன இன்றைய ஆசிரியத்துவம் அடைய வேண்டிய விடயங்களாகும்.

**"வாழ்க்கை என்பது ஒரு பெரிய வாய்ப்பு உயர்வாக சிந்தியுங்கள்,உயர்ந்த விடயங்களை நோக்கி நகருங்கள்.நீங்களும் உங்களை சார்ந்தவர்களும் உயர்நிலையை அடைய பாடுபடுங்கள்"**

புனிதமிகு ஆசிரியத்துவம் என்றும் வாழ்க.

வாழ்த்துக்களுடன்

**க.சுவர்ணராஜா**
உபபீடாதிபதி (நிதி நிர்வாகம்)
வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி
வவுனியா.

## ஆசிச் செய்தி

ஆழமான நுண்மதியுடன், யதார்த்தமான நிஜவாழ்வியில் அனுபவங்களில் சிந்தனைக்கருவூலங்களாக அறிவின் ஊற்றுக்களாக திகழும் ஆசிரியர் தொழில் மேன்மைக்காக அத்தொழில்சார்புலத்திலுள்ள ஒவ்வொருவரும் ஆசிரியத்துவம் முழுமைபெற தம்மைத் தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டிய காலகட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும். வெறுமனே கோட்பாட்டு ரீதியான தேடல்களில் இருந்து விடுபட்டு வாழ்விலின் உண்மை நிலவரங்களை அறிவில் ரீதியான தீர்வுகாண முனைப்புக் கொள்ள வேண்டும்.

அறிவு வளர்ச்சியும் அறிவுப் பரம்பலும் மனித இருப்பை ஆழ்ந்து நோக்காது, இருப்பியத்தின் அகநிலைநோக்க தனிமனித துயரங்கள், இடிந்து சிதறிய மனவுணர்வுகளை ஒருமைப்படுத்த தவறி சுயநல விருத்திக்கான முனைப்புக்களாக வெளிப்படுத்தப்படுகின்றன. துன்பமும் துயரமும் அவலமான வாழ்வும் ஆரோக்கியமான பிரஜைகளை எமது தமிழ் பேசும் சமூகத்திலிருந்து வலிந்து குறைந்து செல்வதற்கான செயற்பாடுகளே அதிகமுள்ளதாகக் கூறவேண்டும். இந்நிலையில் தனிமனித இருப்பை வலிதாக்கிக் கொள்ள ஆசிரியத்தினை ஓர் உந்துசக்தியாக்கிக் கொண்டு செலாற்றுதல் அவசியமாகும்.

தனிமனித விடுதலையையும் ஆக்கமலர்ச்சியும் தேடல் தேர்ச்சியும் குவியப்படுத்தப்பட்ட ஆசிரிய சமுதாயத்தின் தேவை உணர்த்தப்பட்டு வருகின்றது. யாவருக்கும் தேவை உண்டு. யார்யார்க்கு என்ன தேவை என்பதை உணர்ந்து சேவைகள் ஆற்றவே எமக்கு இச்சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. எனவே இவ்வாசிரியர் தினத்தில் தனிமனித அர்ப்பணிப்பும், ஆக்கமலர்ச்சியும் தேடல் தேர்ச்சியும் குவியப்படுத்தப்பட்ட ஆசிரியத்துவத்தை உள்வாங்கி ஆசிரியர்களை மகிமைப்படுத்த திடசங்கற்பம் கொள்வோம். “தெளிவு” என்னும் சஞ்சிகையை வழமைபோல் சிறப்பாக வெளியிட முனைப்புடன் செயலாற்றும் கலாசார மன்றத்தினருக்கும் வழிகாட்டும் போசகர் உள்ளிட்ட ஆசிரிய கல்வியியலாளர்களுக்கும் எனது வாழ்த்துக்களும் பாராட்டுக்களும்.

**சு. பரமானந்தம்**
விரிவுரையாளர் இணைப்பாளர் (கல்வியும் தரமேம்பாடும்)
வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி

# ஆசிச் செய்தி

*"நல்லாசிரியரை அவர்தம் நன்மாணாக்கனே அறிவான்."*

ஆசிரியர்கள் போற்றப்படவேண்டியவர்கள் என்பதும் பூஜிக்கப்பட வேண்டியவர்கள் என்பதும் அவர்களது சேவையே எல்லாச் சேவைகளிலும் உயர்ந்தது என்பதும் எப்பொழுதும் உண்மையானது. விசேடமான தினம் ஒன்றை அவர்களுக்கென்று தெரிந்து கொண்டாடும் நிலை இன்று ஏற்பட்டுள்ளது. இந்த நிலை வெறும் ஆரவாரங்களாகவன்றி மானசீகமாக இடம்பெறுதல் அவசியமானதாகும். பிரதியுபகாரமின்றி எந்த எதிர்பார்ப்புக்களுமின்றி ஆசிரியர்கள் தமது ஆசிரியத்தை வெளிகாட்டும் நிலை எப்பொழுது தோன்றுகின்றதோ அப்பொழுதே இந்த நிலையை நாம் எதிர்பார்க்க முடியும். போட்டி வர்த்தக மயமாக்கப்பட்டுள்ள கற்பித்தலை மானசீகமான அர்ப்பணிப்புள்ள கற்பித்தலாக மாற்றுவது இன்றைய ஆசிரியர்களுக்குள்ள பாரிய சவாலாகும். ஆசிரியர்களின் ஆசிரியத்துவம் என்ற பண்பும் அதற்கேற்ற மாணவர்களின் மாணவத்துவம் என்ற பண்பும் இன்று கேள்விக்குறியான நிலையில் காணப்படுகின்றது. மீண்டும் குருகுலக் கல்வி முறையை கடைப்பிடித்தால் என்ன? எனச் சிந்திக்கும் பலர் எம்மிடையே உருவாகத் தொடங்கியுள்ளனர்.

இந்நிலையில் ஆசிரியர்களினை தங்களைப்பற்றி சுயவிமர்சனம் செய்து கொள்ள உகந்த ஒரு நாளாக இந்த ஆசிரியர் தினத்தைக் நான் கருதுகின்றேன். இந்நாளினை கொண்டாடவும் இந்நாளின் நினைவாக "தெளிவு" எனும் சஞ்சிகையை வெளியிடவும் முன்னிற்கும் ஆசிரிய மாணவர்களை நான் பாராட்டுவதோடு இம்மலரிற்கு எனது ஆசிகளையும் வழங்குகின்றேன்.

**திரு. தி. ஜெயகாண்டீபன்,**
விரிவுரை இணைப்பாளர் (நிதி நிர்வாகம்)
வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி

## கலாசார மன்றத் தலைவரின் சிந்தனைத் துளிகள்...

வருடாவருடம் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் கலாசார மன்றத்தினால் கொண்டாடப்படும் உலக ஆசிரியர் தினத்தை இந்த வருடம் எமது வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் கலாசார மன்றத்தினால் கொண்டாடப்படுவதையிட்டு மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

மாதா,பிதா,குரு,தெய்வம் என்று மூத்தோரின் வரிசைப்படுத்தலுக்கு இணங்க தாய், தந்தைக்கு அடுத்த படியாகவும் நம்மை எல்லாம் படைத்து எம்மை வழிப்படுத்திக் கொண்டிருக்கும் இறைவனைவிட முதலிடத்தில் ஆசிரியர்களை வைத்திருக்கிறார்கள். இந்த வகையில் ஆசிரியரின் முக்கியத்துவமும் ஆசிரியரின் பெறுமதியும் எவ்வளவு தூரத்தில் உயர்த்தி வைத்திருக்கிறார்கள் என்று நாம் அனைவரும் சிந்திக்க வேண்டும்.

ஒரு மாணவன் நன்றாகப் படித்து உயர்நிலைக்கு வருவதற்கு தாய்,தந்தையை விட ஆசிரியர்களே கூடிய பங்கு வகிக்கிறார்கள். இந்த ஆசிரியர் தினத்தை கொண்டாடும் நன்நாளில் நாம் எல்லோரும் ஆசிரியர்கள் என்ற வகையில் சிறந்ததொரு மாணவர் சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்ற கருத்தை நாம் எல்லோரும் எம் மனத்தில் வைத்திருப்போம்.

நீரினால் அடித்து செல்ல முடியாத
தீயினால் எரிக்கப்பட முடியாத
கள்வனினால் களவாடப்பட முடியாத
கொடுக்கக் கொடுக்க குறையாத
கல்விச் செல்வமாகும்.

**நி.உதயசீலன்**
தலைவர்,
கலாசார மன்றம்
வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி

# கலாசார மன்ற செயலாளரின் உள்ளத்திலிருந்து...

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் கலாசார மன்றச் செயலாளர் என்ற வகையில் முதன்முதலில் மலர் ஒன்றிற்கு உரை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். "தெளிவு" என்னும் இச்சஞ்சிகை வருடாவருடம் ஆசிரியர் தினத்தை முன்னிட்டு ஆசிரியர்களை கௌரவிக்கும் முகமாக வெளியிடப்படுவதில் மாணவ ஆசிரியர் என்ற வகையிலும் பெருமதிப்பு அடைகின்றேன்.

மன்றப் பொறுப்பினை எமது நிர்வாகக் குழு ஏற்றத்திலிருந்து முதன்முதலில் நடாத்தப்படும் நிகழ்ச்சி ஆசிரியர் தினமும் முதலில் வெளியிடப்படும் மலரும் இதுவாகும். இதன்போது நாம் பல சவால்களைச் சந்தித்தாலும் அவற்றையெல்லாம் தாண்டி வெற்றிகரமாக இந்நூலை வெளியிடுகின்றோம்.

இந்நூலை தயாரித்து வெளியிடுவதற்கும், இந்நிகழ்வுகளை சிறப்புற நடாத்துவதற்கும் எமக்கு பூரண ஒத்துழைப்பையும் ஊக்கத்தையும் வழங்கிய உபபீடாதிபதி (நிதி நிர்வாகம்) திரு.க.சுவர்ணராஜா அவர்களுக்கும், மன்றப் ஆலோசகர் விரிவுரையாளர் இணைப்பாளர் (நிதிநிர்வாகம்) திரு.T.ஜெயகாண்டீபன் அவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு ஆசிரியர் தின நிகழ்வுக்கான அனுமதிகளை வழங்கி ஒத்துழைப்பை வழங்கிய பீடாதிபதி மற்றும் ஏனைய கல்விச் சமூகத்தவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இனிவரும் காலங்களில் எமது மன்றத்தால் நடாத்தப்படும் நிகழ்வுகள், செயற்பாடுகள் அனைத்தும் திறம்பட இருக்க வேண்டும் என இறைவனை வேண்டிக் கொள்கின்றேன்.

**B.றஜிதா**
செயலாளர்,
கலாசார மன்றம்
வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி

# இதழாசிரியர்களின் உள்ளத்திலிருந்து...

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் கலாசார மன்றத்தினரால் ஆசிரியர் தினத்தை முன்னிட்டு “தெளிவு” எனும் சஞ்சிகையினை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

இச்சஞ்சிகையானது ஆசிரியர் சம்பந்தமான ஆக்கங்களை உள்ளடக்கி உருப்பெற்றுள்ளது எனலாம். தெளிவு எனும் இம்மலர் சிறப்பாக வெளிவருவதற்கு துணைநின்ற அனைத்து உள்ளங்களையும் சிறப்பாக நினைவுகூருகின்றோம்.

இச்சஞ்சிகைக்கு ஆசிச் செய்தி ஆக்கங்களைத் தந்துதவிய அனைவருக்கும் உளம்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். தொடர்ந்து இவ்வாறான நிகழ்வுகளுக்கு ஆக்கமும், ஊக்கமும் தந்துதவுமாறும் கேட்டுக் கொள்வதோடு தொடர்ந்தும் தெளிவு என்ற சஞ்சிகை சிறப்பாக வெளிவரும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**த. குமணன், சி. வசந்தராஜ்**
இதழாசிரியர்கள்
கலாசார மன்றம்
வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி

## நல்ல ஆசான்
## (சிறுகதை)

கயந்தனுக்கு அன்றைய இரவு உறக்கமே வரவில்லை. அடிக்கடி எழுந்து சுவரில் மாட்டப்பட்டிருந்த கடிகாரத்தைப் பார்க்கிறான். நேரம் தாமதமாக ஓடுவதைப்போல் அவனுக்கு இருந்தது. "ச்சீ.. இது.. என்ன மணிக்கூடு.." என நினைத்துக் கொண்டு உறங்கிவிட்டான். அவனுடைய இத்தனை அவசரத்திற்கும் காரணம் அவன் அன்று காலை வழமை போல் பாடசாலைக்கு செல்லும் வழியில் நிகழ்ந்த சம்பவம்தான்.

"வெள்ளிக்கிண்ணம் ஒன்றுடனும் கறைபடிந்து ஆங்காங்கே கிழிந்த இடங்களுக்கு ஊசியும் குத்திக்கொண்ட ஆடையுடனும், சீவிமுடிக்காத தலையுடனும் கால்களில் பாதணிகூட இன்றி பிச்சை எடுத்துத்திரியம் அந்த சிறுமியைப் பற்றிய நினைவுதான் அவனுக்கு ஏற்பட்டது. யார்? அந்தச் சிறுமி. இவளின் தாய், தந்தை எங்கே இருக்கிறார்கள். இந்த வயதில் இவளுக்கு ஏன் இப்படி நிலைமை. எல்லோரும் ஒரு பக்கம் ஏசுகின்றார்கள். தள்ளிவிடுகின்றனர். நிலத்தில் புரண்டு விழுந்தும் மீண்டும் எழுந்து நடக்கிறாளே.... எப்படியாவது மறுநாள் சிறுமியைச் சந்திக்க ணேடும் என ஆர்வம் கொண்டு கடிகாரத்தை பார்த்தபடியே உறங்கிவிட்டான்.

சேவல்கள் எல்லாம் விடியலை தெரியப்படுத்தி கூவிக் கொண்டிருந்தன. கோயில்மணி ஓசைகேட்டு எழுந்த கயந்தன் அவசர அவசரமாக வெளிக்கிட்டு தெருவை அடைந்தான். சிறுமியைத் தேடி தன் கண்களை அலைவிட்டான். எங்கும் காணவில்லை. அப்பொழுது "முழிவியலத்திற்கு விடிய வந்திட்டியே வெளியில போ.." என்ற சத்தம் வருகிலுள்ள கடையில் இருந்து கேட்டதும் தனது பார்வையைச் செலுத்தினான். அங்கே அதே சிறுமி நின்றிருந்தாள்.

திருமணம் செய்து நான்கு வருடங்கள் குழந்தையின்றியிருக்கும் கயந்தனுக்கு அச்சிறுமிமேல் பரிதாபம் ஏற்பட்டது. அவளை அணுகி அவள்தோளில் தனது கைகளை வைத்து "என்னம்மா பெயர் என கயந்தன் கேட்டான்". "வளர்மதி" என அவளின் வாயிலிருந்து வந்த சத்தம் ஒரு சாந்தமாக இருந்தது. அவளின் குடும்பம் பற்றி விசாரித்தான் கயந்தன்.

"அங்கிள், அம்மாவும் அப்பாவும் ஷெல் அடிச்சு இறந்திட்டினம். நானும் தம்பியும் தான் தப்பினம். உறவுகளை எல்லாம் நம்பி வந்தோம். அவர்கள் எங்களை றோட்டில கையேந்த வைத்திட்டினம். தம்பியை நான் படிக்க வச்சிருக்கிறேன் என வளர்மதி கூறவும் கயந்தன் பொறுமையிழந்து "எந்த ஸ்கூல்" எனக் கேட்டான். அப்போது அவர் பக்கத்தில் இருக்கிற ஸ்கூல்தான். அவன்ர படிப்புச் செலவை என்னால் இப்படித்தான் செலவு செய்ய முடியும் என்றாள். தம்பியின் கல்விக்காக அவள் படும் கஸ்ரம் கயந்தனை மெய்சிலிர்க்க செய்தது.

அவளை வளர்மதியின் தம்பி மிதுன் கற்கும் பாடசாலைக்கு சென்றான்

கயந்தன். என்ன அதிர்ச்சி கயந்தன் திகைத்தே விட்டான். அவன் கற்பிக்கும் பாடசாலைதான். அப்பொழுது ஊஞ்சலாடிக் கொண்டிருந்த மிதுனன் "அக்கா என அழைத்துக் கொண்டு ஓடிவந்து அவளை கட்டி அணைத்து "அக்கா என்ன சாப்பாடு கொண்டு வந்தாய் பசிக்குது" என்று சொன்ன போது கயந்தன் தன்னை மறந்து கண்கலங்கி விட்டான்.

மிதுனனையும், வளர்மதியையும் கட்டியணைத்த கயந்தன் "கவலைப்படாதேங்கோ..." இனிமேல் என்னோடதான் இருக்கணும்" எனக்கூறி பாடசாலைக்கு விடுமுறையைப் போட்டுவிட்டு ஓட்டோவில் இருவரையும் ஏற்றிக் கொண்டு வீட்டிற்குப் புறப்பட்டான் கயந்தன்.

அன்பு பொங்கும் விழிகளுடனும் பிரகாசித்த முகத்துடனும் அவர்களை கட்டியணைத்து வரவேற்றாள் கயந்தனின் மனைவி சுமதி. கயந்தன் மிதுனனுடன், வளர்மதியையும் படிக்க வைத்து அவர்களைத் தன் பிள்ளைகளைப்போல் அன்புடன் அரவணைத்து வளர்த்து வந்தான்.

**ம. திலீபனா**

105/12/PT/11

1ம் வருடம்

ஆரம்பப் பிரிவு

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி

## ஆசான்கள்

அகரத்தைத் தொடக்கி வைத்து -நான்
சிகரம் தொட்ட போது
பேருவகை அடையும்
பெருந்தகைகள்

உலகின் இருள் அகற்றி
ஒளி கொடுக்கும் சூரியன் போல்
கல்விப்புல அக இருள் நீக்கி
ஒளியேற்றும் ஒப்பற்ற ஒளிவட்டங்கள்

அர்ப்பணிப்பு உழைப்பு
அனுதினமும் மாணவர் நினைப்பு
கற்பொழுக்கம் தவறாத மகளிர்போல்
மாசில்லாக் கல்வியினை
மாண்புடனே ஊட்டிவிடும்
நடமாடும் தெய்வங்கள்

குற்றமற்றவன் என்பதன் பொருள்
ஆசான்
கற்பிப்பதில் பித்தம் சிறிதுமின்றி
எம்மை கற்பித்து
விற்பன்னராக்கிவிடும் விருட்சங்கள்

மனைப்பிரச்சினை தனைமறந்து
மாணவர்தமை மனதிற் கொண்டு
மாசற்ற பணிசெய்யும்
மாண்புமிகு தியாகச் செம்மல்கள்

அன்பாக அரவணைத்து
அறிவுடனனே கல்விக் கணைதொடுத்து
இலக்கினை நாம் அடைந்திட
இயம்பிடும் அறிவுரைகள்
சாற்றிடும் உம்புகழை
ஏற்றிடுவோம் எம்மனதில்

**கி.அபிராமி**

95/12/PT/01
ஆரம்பப் பிரிவு
வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி

## குரு

அறிவெனும் பொக்கிசத்தால்
வளர்ந்து நின்று
அறிவுப்பசி போக்குகின்ற
அறிஞர்கள் நம் ஆசான்கள்

கல்வியின் அத்திவாரத்தை -நாம்
தொடுகின்ற போதிலே
தூணாய் நின்று எமை தாங்கும்
தூண்கள் இவர்கள்

இன்பமும் துன்பமும் தொடரும்
நம் வாழ்வில் - எமை
இன்பத்துடன் காண நினைக்கும்
கருணையின் சிகரமான
கடவுளர்கள் இவர்கள்

எதிர்கால வாழ்விற்காய்-எம்
தாயாக தந்தையாக நின்று
கல்வியுடன் நல் ஒழுக்கமும்
கற்றுத்தரும் சிற்பிகள்

ஆலமரவிழுதுகளாக கல்வியில் நாம்
விழுதுபரப்பி விருட்சமாக
ஆணிவேராய் நின்று
அடித்தளமிடுபவர்கள்...

உண்மை நேர்மை உயர்ந்த நற்பண்பை
உணர்வுடன் கடைப்பிடித்து
வண்ணமாய் ஒளிரும் மாணவ உலகில்
மாணிக்கமாய் எமை மிளிரச் செய்பவர்கள்...

விண்மீன்களாய் கண்சிமிட்டும்
மாணவமணிகட்கு
மதிநிலவாய் நின்று ஒளியூட்டும்
ஆசான்கள்

அன்பினை ஊட்டி
அறிவினை வளர்க்க - தம்மை
அர்ப்பணித்திடும் தியாகிகள்
துன்பங்கள் வருகின்றங போதும்
துடிதுடிப்பாய் செயற்படுவார்.

கடமை கண்ணியம் கட்டுப்பாட்டினை
திடமுடன் கடைப்பிடித்து
மடைமை உடைத்து
மாட்சிமை மிகுந்த மதியுகம் படைக்க
எம்மை வழிகாட்டுபவர்கள்

சிதறிக்கிடக்கும் எம் உள்ளங்களிற்கு
சிந்திக்கும் சிந்தனைகள் ஊட்டி
கல்விப்பயிர் செழிக்க
அறிவூற்றை ஊட்டுபவர்கள்

நந்தவனப்பூக்கள் நாம்
மலர்வதற்கு மறந்து போனாலும்
அறிவூட்டி எமை மலர்ந்திடச்
செய்திடுவர்

வெள்ளேட்ட ஓடங்களாய் - நாம்
வழிதவறி கரையைநாடும் போது
நேரிய வழியைக்காட்டி- எமை
இலட்சியத்தை அடையச் செய்வார்.

**சி. கிஸ்ணவேள்,**
119/12/pt/25
1ம் வருடம்
ஆரம்பப் பிரிவு
வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி

## வருக வருக...

இன்று பூத்த பூக்கள்
உம் கழுத்தில் அணிய
மலரந்தவையே!
இம்மலர்ந்த பூக்கள்
மண்ணில் விழுந்து
சருகாகி போவதற்குள்
எம் கண்ணில் பட்டதால்- அவை
எம் கண்ணியமான
ஆசான்கள் கழுத்தில்
சரித்திரமாகிறது.

எம் திறந்த மனதுடன்
உம் சிறந்த பணிக்காக
வாழ்த்தி வரவேற்கிறோம்
வருக வருக
எம் கல்வி பெருகுக
எம் அறியாமை அருக
எமக்கு அறிவை தருக - இவர்களுக்கு
மலரை அள்ளிச் சொரிக!

யார் அங்கே
இங்கே வந்த ஆசான்களின்
ஆசனங்களைத் துடைத்து
அமரச் செய்யுங்கள்
மரியாதை மனதில் மட்டுமல்ல
செயலிலும் காட்டுங்கள்
கண்டதும் காலை வணக்கம்
சென்றதும் ஏளனச்சிரிப்பு
என்றில்லாமல்
என்றும் மதித்திடுவோம்.

கருவில் கருவாக இருந்து
தெருவில் குறும்பாக
நின்ற எம்மை
கல்வியில் குருவாக
மாற்றிய ஆசான்களே
வருக... வருக....

எழுத்தெழுதும் போது
விழித்தெழுந்தோம்
எழுந்தருளச் செய்த

எம் ஆசான்களை
எழுந்து வரவேற்றோம்
பற்றிப் பிடித்த பென்சிலை
உற்றுப் பார்த்து பிழைதிருத்தி
கற்றுத் தந்த எம் ஆசான்களை
பற்றுடன் வரவேற்போம்

பழுத்த ஓலை மட்டைகளல்ல - இவர்கள்
எழுத்தறிந்த கல்வெட்டுக்கள்
இறந்த பின்னும்
சிறக்கும் சிற்பங்கள்

வியர்வை சிந்தி
உழைத்துத் தந்த - என்
தந்தைக்கு முதல் நன்றி.
உயர்வைத் தந்து
அசர வைத்த ஆசான்களுக்கு
அடுத்த நன்றி
நன்றி நன்றி கோடி நன்றி.

**W.Mohamed Aslam**
102/11/AG26
Agriculture
வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி

# Be careful

**Be careful of your thoughts**
**For your thoughts become your words**

**Be careful of your words**
**For your words become your actions**

**Be careful of your actions**
**For your actions become your habits**

**Be careful of your habits**
**For your habits become your character**

**Be careful of your character**
**For your character becomes your destiny**

# நினைவில்....

மனம் போகும் போக்கில்
தடம் மாறும் என்
வாலிபப் பருவத்தில் - அவள்
எண்ணங்கள் அலைமோதுகின்றன.

தினமும் நித்திரைக்குச் செல்லும்முன்
என் நயனங்கள் அவளை
ஒருமுறையேனும் நினைவுக்கு
கொண்டு வந்து விடுகின்றன.

எழுதி எழுதி என் பிஞ்சு விரல்கள்
வலிதாங்கிய காலமதில்
ஆறுதல் கூறி என்னை
அன்பாய் அரவணைத்தவள் அவள்தானே.

சோர்வின்றி செயற்பட்டால்
தடைகளைத் தகர்த்திடலாம்
கஸ்டங்களும் வலிகளும்
சில காலமே என்று
தினமும் நம்பிக்கையூட்டியவள்
என்றும் என் சொப்பணத்தில் நிறைகின்றாள்.

உலகில் பகுத்தறிவை
உவப்பிலா அன்பின் பண்பை
குலமகள் எனக்குரைத்து
கொள்கைக்கு வித்திட்டாள்.
தலைகீழாய் பிடித்தாலும்
நேராய் எரிமுய் சுடராய்
திசைமாறிய வாழ்விற்கு
திசைகாட்டியாக உழைத்த
ஆரம்பக்கல்வி ஆசிரியையை
என் நெஞ்சம் என்றும் மறப்பதில்லை.

இன்று நான் பல சிறாருக்கு
வழிகாட்டியான குருவானபோதும்
என்னை உயர்த்திவிட்ட
என் ஆசிரியர் வதனத்தை
ஒவ்வொரு ஏழை மாணவர்
முகத்திலும் ஒளிரும் - அவள்
ஸ்பரிசத்தை தினமும் நேசிக்கின்றேன்.

**பெ.ரோகினி**
வர்த்தகப்பிரிவு (2ம் வருடம்)
வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி

# CHARACTERISTICS OF EFFECTIVE TEACHERS

Fairness

Positive Attitude

Preparedness.

Personal Touch

Sense of Humor

Creativity

Willingness to Admit Mistakes.

Forgiving

Respect

High Expectations

Compassion

Sense of Belonging

> "Teaching is the highest form of understanding."
> - Aristotle

# The 7 Habits of Highly Effective Teachers

Interdependence

Independence

Dependence

1. Be Proactive
2. End in mind
3. 1st things 1st
4. Think win-win
5. Understand
6. Synergize
7. Sharpen saw

# Traits of a Good Teacher

**When I walk into a school, I want to see:**

*smiling children*
*smiling staff*
*respectful interactions*
*creative expression*

**When I walk into a classroom, I want to see (in no particular order):**

*all of the above*
*calm children*
*warm teacher*
*positive, respectful language*
*curious children*
*purposeful activities*
*lack of visual clutter*

**When I am observing a teacher, I want to see (in no particular order):**

*a quiet presence*
*an encouraging guide*
*passion*
*constantly learning and evolving*
*someone in control (calmly and confidently)*
*knowledgeable*
*joy*
*creating independence*
*fostering creativity and ingenuity*
*intrigue*
*appropriately high expectations*
*genuine interest in the children*
*smiles*
*good sense of humor*
*consistency*
*fairness*
*good listening skills*
*someone who can quiet the room with only the tiniest sound*
*differentiates the curriculum to challenge every student*

# Classroom Management

## ஆசிரியர் இயல்

அச்சுறுத்தும் முடிவுக்கு வந்தேன்
வகுப்பறையில் **இயக்கம்** நானேயாவேன்.

எனது **அணுகு முறைகளே**
வகுப்பறையை மலர்விக்கும் கவிநிலைகள்
எனது **மனோ நிலையே**
அன்றைய நாளின் வானிலையாகும்
ஓர் ஆசிரியன் என்ற வகையில்
மாணவன் வளம் பெறுவதிலும்
வழி தவறுதலிலும்
எனது **ஆளுகையே**
அதீத மாகின்றது.
எனது செயல்கள்
மாணவனுக்கு மகிழ்ச்சி தரலாம்
மனச் சோர்வு தரலாம்
நோய் தரலாம் - நோ அகற்றலாம்
எந்நிலையிலும் **எனது துலங்கலே**
பூதாகரமாகத் தலைதூக்கும்
எனது துலங்கலால்
நெருக்கடிகள் எழலாம்
அல்லது விழலாம்
மாணன்
உலகம் வியக்கும் மானுடனாகலாம்
அல்லது எதிர்மானுடனாகலாம்.

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி
வவுனியா.

**Self-Awareness........Heart**
**Imagination............Mind**
**Conscience.............Spirit**
**Independent Will.......Body**

# Types of Teaching Styles

A quick review of the literature reveals a seemingly endless series of frameworks for classifying teaching styles. Daniel Pratt (2002), for example, defines five different approaches towards learners and content. Fischer and Fischer (1979) identify six categories which include Task Oriented, Cooperative Planner and Subject-Centered. There are numerous other classifications of teaching styles.

For the purposes of this orientation, we'll examine the theories of Grasha & Grasha, who divide teaching styles into four areas. After reading about these teaching styles below, you can take a quiz, which will give you some information about your preferred type of teaching style.


**Formal Authority** - The Formal Authority approach focuses on content and can be very instructor-centered. The instructor defines the theories, principles, concepts or terms that the student needs to learn and organizes them into a sequenced set of goals or objectives. Evaluations are a necessary part of course planning as they allow the instructor to ascertain the amount of student learning that has taken place.

**Demonstrator** - This approach concentrates on the performance of an academic procedure. The instructor defines the steps an expert in the field would use to accomplish necessary tasks as well as defines the standards which would indicate mastery in applying these procedures. The instructor then develops situations in which these steps can be performed and results observed. The instructor may be the one who demonstrates the procedures; students may be the ones practicing the procedures, or some combination of both.

**Facilitator** - Teachers who have a facilitator model teaching style tend to focus on activities. This teaching style emphasizes student-centered learning and there is much more responsibility

placed on the students to take the initiative for meeting the demands of various learning tasks. Teachers typically design group activities which necessitate active learning, student-to-student collaboration and problem solving.

**Delegator -** Teachers who practice a delegator teaching style tend to place control and responsibility for learning on individuals or groups of students. This teacher will often give students a choice in designing and implementing their own complex learning projects and will act in a consultative role.



# My Teacher

YOU WERE MY GREATEST TEACHER
BECAUSE YOU ARE THE ONE
WHO MADE ME WANT TO LEARN
THE BEST TRUTHS BENEATH THE SUN

THE BEST DAY WAS TODAY
THE BEST GIFT, FORGIVENESS
WISDOM BEST, COMMON SENSE
OF SPIRITS THE BEST CHEERFULNESS!

YOU TAUGHT THESE: THE GREATEST
WISHED, RAREST CHOSE
TO GRANT, MY SOUL TO LIFT

ஆசிரியர் தின வாழ்த்துக்கள்

G.L.P.

## GLP Civil Construction

**Main Branch**

#55 Uppukkulam

Mannar.

**Sub Branch**

#27/5 Pathiniyar Mahilankulam

Vavuniya.